**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, கள்ளக்குறிச்சி**

முன்னிலை: – திரு.ஜெ. ஹரிஹரசுதன், B.A., L.L.B, (Hons)
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
கள்ளக்குறிச்சி.

**2026ம் வருடம் மார்ச் மாதம் 10ம் நாள் செவ்வாய்கிழமை**

**சுருக்கு வழக்கு எண். 157/2022**

TNKA02-000270-2022

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
வரஞ்சரம் காவல் நிலையம்,
காவல் நிலைய குற்றஎண்.308/2019 ... குற்றமுறையீட்டாளர்

// எதிராக //

பெரியசாமி, வயது 50/2019,
த/பெ.பாண்டியன் ... எதிரி

| | | | |
|---|---|---|---|
| 1. | குற்ற முறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | : | காவல் உதவி ஆய்வாளர்,<br>வரஞ்சரம் காவல் நிலையம்,<br>காவல் நிலைய குற்றஎண்.308/2019 |
| 2. | எதிரியின் பெயர் மற்றும் முகவரி | : | பெரியசாமி, வயது 50/2019,<br>த/பெ.பாண்டியன் |
| 3 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாட்கள் | : | 04.11.2019 முதல் 07.11.2019 வரை நீதிமன்ற காவலில் இருந்துள்ளார். |
| 4 | குற்றம் நடந்த நாள் | : | 03.11.2019 |
| 5 | கோப்பில் எடுத்த நாள் | : | 14.03.2022 |
| 6 | எதிரி ஆஜராகிய நாள் | : | 02.09.2021 |
| 7 | புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 04.11.2019 |
| 8 | எதிரியிடம் இறுதி அறிக்கையில் உள்ள குற்றச்சாட்டுகள் குறித்து வினவப்பட்ட நாள் | : | 06.09.2021 |
| 9 | குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல் | : | - |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட நாள் மற்றும் அதன் இறுதி உத்தரவின் மேலான மேல் முறையீடு எதுவும் இருப்பின் அந்த நீதிமன்றம் குறித்து விபரம் | | |
| 10 | சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | : | சாட்சிகள் / முதல் விசாரணை / குறுக்கு விசாரணை:<br>அ.சா.1 / 21.09.2021 / 21.09.2021<br>அ.சா.2 / 21.09.2021 / 21.09.2021<br>அ.சா.3 / 16.02.2026 / இல்லை<br>அ.சா.4 / 23.02.2026 / இல்லை<br>அ.சா.5 / 25.02.2026 / 25.02.2026 |
| 11 | சான்று பொருட்கள் | : | இந்த வழக்கில் சான்றுபொருட்கள் கைப்பற்றப்படவில்லை. ஆகையால் அதைப்பொருத்து உத்தரவு ஏற்படுத்தப்படவில்லை. |
| 12 | எதிரியிடம் பிரிவு 313 (1) (ஆ) குவிமுச–வின் கீழ் விசாரிக்கப்பட்ட நாள் | : | 07.03.2026 |
| 13 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : | 09.03.2026 |
| 14 | எதிரி தலைமறைவாக இருந்த நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நாள் | : | Nil |
| 15 | மேல் நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தடை மற்றும் இறுதி உத்தரவு குறித்த விவரம் | : | Nil |
| 16 | குற்றச்சாட்டுகள் | : | எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 352, 506(1)ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| 17 | சட்டப்பிரிவுகள் | : | இதச பிரிவுகள் 341, 294(b), 352, 506(1) |

Nested table (row 10):

| சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 21.09.2021 | 21.09.2021 |
| அ.சா.2 | 21.09.2021 | 21.09.2021 |
| அ.சா.3 | 16.02.2026 | இல்லை |
| அ.சா.4 | 23.02.2026 | இல்லை |
| அ.சா.5 | 25.02.2026 | 25.02.2026 |

| | | | |
|---|---|---|---|
| 18 | தீர்ப்புரை | : | முடிவாக, எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 352, 506(1)ன் கீழான குற்றச்சாட்டுகளும், அரசு தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களின் மூலம் எவ்வித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரி மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என்றும் தீர்மானிக்கப்பட்டு, மேற்படி பிரிவுகளில் இருந்து எதிரி குவிமுச 255(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 19. | காலதாமதத்திற்கான காரணம் | : | எதிரி விசாரணைக்கு ஆஜராகாமல் பிடிக்கட்டளை நிலுவையில் இருந்து வந்ததாலும், சாட்சிகள் விசாரணைக்கு ஆஜராக காலதாமதம் ஏற்பட்ட காரணத்தினாலும், கொரோனா ஊரடங்கினாலும், ஏற்பட்ட காரணத்தினாலும் வழக்கை முடிக்க காலதாமதம் ஏற்பட்டது. |

* * * * *

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் கடந்த 14.03.2022-ம் தேதியில் கோப்புக்கு எடுக்கப்பட்டு, அரசுத்தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.பாண்டியன் அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கில் இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும், இன்று 10.03.2026ம் தேதி இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும்......

**<u>தீர்ப்புரை</u>**

இந்த குற்ற வழக்கானது வரஞ்சரம் காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 352, 506(1)ன் படியான குற்றங்களுக்காக தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் பெயரில் தொடரப்பட்டதாகும். இந்த வழக்கானது முதலில் இந்த நீதிமன்றத்தில் STC No.30/2021 ஆக கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் பின்னர் மாண்புமிகு விழுப்புரம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்

அவர்களின் உத்தரவின் பெயரில் சிறப்பு நீதித்துறை நடுவருக்கு மாற்றப்பட்டு, மீண்டும் அங்கிருந்து இந்த நீதிமன்றத்தில் பெறப்பட்டு STC No.157/2022 ஆக வேறு எண் கொடுக்கப்பட்டு உள்ளது.

**<u>1.இறுதி அறிக்கையின் சுருக்கம்:</u>**

வரஞ்சரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கொட்டையூர் கிராமத்தில் வாதியான வனிதாவும் எதிரியும் ஒரே வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். ஆனால் தற்போது வாதியும் அவரது கணவருமான சண்முகவேல் கள்ளக்குறிச்சியில் குடியிருந்து வருகிறார்கள். 03.11.2019 அன்று வாதியும் அவரது கணவரும் அவர்களது வீட்டிற்கு சென்றபோது 11.00 மணியளவில் எதிரி கட்டிலை குறுக்கே போட்டு வைத்திருந்ததை வாதி கேட்டபோது எதிரி "உங்களுக்கு வீடும் கிடையாது, காடும் கிடையாது" என அசிங்கமாக திட்டி, குச்சியால் முதுகில் அடித்தார். அதை தடுத்த சாட்சி சண்முகவேலையும் எதிரி அடித்து இருவருக்கும் எதிரி தொடுவலியை ஏற்படுத்தினார். பின்னர் மேற்படி நபர்களை எதிரி மிரட்டி உள்ளார். மேற்சொன்னவாறு எதிரி குற்றம் புரிந்துள்ளதாக இந்த இறுதி அறிக்கை உள்ளது.

2. குற்றப்பத்திரிக்கையை பரிசீலனை செய்து கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு வழக்கு எண் வழங்கப்பட்டு எதிரிக்கு கு.வி.மு.ச.204–ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குற்றவியல் நடைமுறைச்சட்டப் பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

4. இவ்வழக்கின் இறுதி அறிக்கையும், அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து, வாதி தரப்பும், எதிரி தரப்பும் கேட்கப்பட்டு எதிரி குற்றம் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு ஆதாரம் இருக்கிறது என்பதால் எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 352, 506(1)ன் கீழான குற்றச்சாட்டின் சாரம்சம் குறித்து விளக்கி வினவியபோது எதிரி தான் குற்றத்தை செய்யவில்லை. பொய் வழக்கு, குற்றவாளி இல்லை

என்று மறுத்து விசாரணை செய்யவேண்டும் என்று கோரினார். எனவே அதைத்தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசு தரப்பில் 7 சாட்சிகள் பட்டியலிடப்பட்டிருந்த நிலையில், பட்டியல் சாட்சிகள் 3 (திரு.சிங்காரம்) மற்றும் 4 (திரு.தனபால்) ஆகியோர்கள் இறந்து விட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு, அவர்களது இறப்பு சான்றிதழ் நகல்கள் தாக்கல் செய்யப்பட்டது. மீதமுள்ள சாட்சிகள் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலானவர்களாக விசாரணை செய்யப்பட்டனர். அவர்களின் மூலம் அரசு தரப்பில் புகார், பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம், முதல் தகவல் அறிக்கை, பார்வை மகசர், மாதிரி வரைபடம் ஆகியவைகள் முறையே அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்களாக குறியீடு செய்யப்பட்டது. இந்த வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:</u>

6. வாதியான அ.சா.1 (திருமதி.வனிதா) தான் கள்ளக்குறிச்சியில் வசிப்பது பற்றியும், தனது சின்னமாமனாரான எதிரியுடன் நிலம் சம்பந்தமாக தகராறு இருந்து வருவது பற்றியும், 03.11.2019 அன்று காலை 11.00 மணியளவில் கொட்டையூரில் உள்ள வீட்டிற்கு சென்றபோது, எதிரி வழிமறித்து குச்சியால் அடித்ததை பற்றியும், அதை மறித்த தனது கணவரையும் எதிரி அடித்ததை பற்றியும், தன்னை அசிங்கமாக திட்டி கொன்று விடுவேன் என மிரட்டியதைப் பற்றியும், அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 (திரு.சண்முகவேல்) அ.சா.1 தனது மனைவி, எதிரி தனது சின்ன தாத்தா என்பது பற்றியும், தங்களுக்கும் எதிரிக்கும் நிலப்பிரச்சினை இருந்து வருவது பற்றியும், 03.11.2019 அன்று காலை 11.00 மணியளவில் கொட்டையூரில் உள்ள வீட்டிற்கு சென்றபோது எதிரி வழிமறித்து தனது மனைவியை அசிங்கமாக திட்டி குச்சியால் அடித்ததை பற்றியும், அதை மறித்த தன்னையும் அடித்ததை பற்றியும், தங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். பார்வை மகசர் சாட்சிகளில் ஒருவரான அ.சா.3 (திரு.முருகன்) தான் கொட்டையூரில் வசிப்பது பற்றியும், பார்வை மகசரில்

உள்ள கையொப்பத்தை 5 வருடத்திற்கு முன்பாக யாரோ வாங்கியதைப் பற்றியும், இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாததைப் பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 (திரு.பாலமுருகன்) தான் கொட்டையூரில் வசிப்பதை பற்றியும், பார்வை மகசரில் தன்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை என்பது பற்றியும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்பதை பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். வழக்கின் விசாரணை அதிகாரியான அ.சா.5 (திரு.ஏழுமலை) இந்த வழக்கில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது பற்றியும், சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்பாக பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது பற்றியும், சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதை பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. மேற்கூறிய அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சிய பகுதிகளை குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 313 (1)(ஆ)–ன் கீழ் விளக்கி கூறி கேள்வி கேட்க எதிரி பொய் சாட்சியம் என்றும், பொய் வழக்கு என்றும், தன்னுடைய தரப்பில் சாட்சிகள் இல்லையென்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் எதிரி மீதான குற்றச்சாட்டு ஆனது அரசு தரப்பால் எந்த ஒரு சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**<u>தீர்வு:</u>**

9. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அவ்வாறு பரிசீலனை செய்த பொழுது, வாதியான அ.சா.1க்கும் அவரது உறவினரான எதிரிக்கும் நில தகராறு சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்த நிலையில், 03.11.2019 அன்று காலை 11.00 மணியளவில் கொட்டையூரில் உள்ள வீட்டிற்கு அ.சா.1ம் அவரது கணவரான அ.சா.2ம் சென்றபோது, அவர்களை எதிரி வழிமறித்தார் என்றும், மேலும் எதிரி அ.சா.1யை அசிங்கமான

வார்த்தைகளால் திட்டி குச்சியால் முதுகில் அடித்தார் என்றும், அதை மறித்த அ.சா.2யையும் எதிரி அடித்தார் என்றும், மேலும் அ.சா.1 மற்றும் அ.சா.2க்கு எதிரி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அரசு தரப்பில் இந்த வழக்கு உள்ளதை காணமுடிகிறது.

10. வாதியான அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து அ.சா.ஆ.1 புகாரானது வாதியால் கொடுக்கப்பட்டதுதான் என்பதை உறுதி செய்யமுடிகிறது. மேற்படி அ.சா.ஆ.1, அ.சா.1ன் சாட்சியம் மற்றும் அ.சா.2ன் சாட்சியம் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கையில், இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாகவே அ.சா.1 தரப்பிற்கும் எதிரிக்கும் நிலப்பிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்பதையும், இருதரப்பினருக்கும் இடையே ஏற்கனவே சிவில் வழக்குகளும் நிலுவையில் இருந்து வருகிறது என்பதையும், அது சம்பந்தமாக இருதரப்பிற்கும் முன் விரோதம் இருந்து வந்து பேச்சுவார்த்தை எதுவும் இல்லை என்பதையும் அறியமுடிகிறது. அவ்வாறு இருதரப்பிற்கும் நிலப்பிரச்சினை சம்பந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் இருப்பது தொடர்பாக இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பாகவே முன்விரோதமானது இருந்து வருவது என்பது, இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் பழிவாங்கும் உள்நோக்கத்தை அளிக்கக் கூடியது என்பதை அறியமுடிகிறது. அவ்வாறு பழிவாங்கும் உள்நோக்கமானது வழக்கு சம்பவத்திற்கு முன்பாகவே இருக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளதால், இந்த வழக்கில் வாதியாலும் வாதியை சார்ந்தவராலும் அளிக்கப்படும் சாட்சியத்தை கவனமாக பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

11. அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கையில், அவர்கள் இருவரும் கோர்வையாக அரசு தரப்பு வழக்கில் உள்ளவாறு சம்பவத்தன்று எதிரி தங்களை வழிமறித்தார் என்றும், அ.சா.1யை அசிங்கமாக திட்டினார் என்றும், குச்சியால் அடித்தார் என்றும், அதை கேட்ட அ.சா.2யையும் குச்சியால் அடித்தார் என்றும், அதை தொடர்ந்து எதிரி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும் தெரிவித்துள்ளதை காணமுடிகிறது. மேலும் இருவரும் சம்பவத்தை அருகில் இருந்த சிங்காரம்,

முருகன் மற்றும் பாலமுருகன் ஆகியோர்கள் விலக்கிவிட்டதாக தெரிவிப்பதை அறியமுடிகிறது. அவர்கள் இந்த வழக்கில் பட்டியல் சாட்சிகள் 3, 5 மற்றும் 6ஆக உள்ளதையும், அவர்களில் பட்டியல் சாட்சி 3 இறந்துவிட்டார் என்பதையும், மற்றவர்கள் பார்வை மகசர் சாட்சிகளாக அரசு தரப்பால் குறிப்பிடப்பட்டு அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளதையும் காணமுடிகிறது. அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.3ம், அ.சா.4ம் மேற்சொன்னவாறு சம்பவத்தை விலக்கிவிட்டதாக அவர்கள் சாட்சியத்தில் தெரிவிக்காமல், இந்த வழக்கு பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என தெரிவித்துள்ளதை காணமுடிகிறது. அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியத்தின்படி அ.சா.1ம், அ.சா.2ம் கள்ளக்குறிச்சியில் வசிப்பவர்கள் என்பதையும், அரசு தரப்பு வழக்கிலிருந்து அவர்கள் சம்பவத்தன்று சம்பவயிடம் அமைந்துள்ள கொட்டையூர் பகுதிக்கு சென்றதாக உள்ளது என்பதையும் அறியமுடிகிறது. ஆனால் மேற்சொன்னவாறு சம்பவத்தன்று அவர்கள் கள்ளக்குறிச்சி பகுதியில் இல்லை என்பதையும், கொட்டையூர் பகுதியில்தான் இருந்தார்கள் என்பதையும் உறுதிப்படுத்தும் விதமாக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.3ம், அ.சா.4ம் எதுவும் தெரிவிக்கவில்லை என்பதையும், மேற்கொண்டு வேறு எந்த நபர்களும் அரசு தரப்பில் அது குறித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதையும் அறியமுடிகிறது.

12. விசாரணை அதிகாரியான அ.சா.5ன் சாட்சியத்திலிருந்து இந்த வழக்கில் புகாரானது சம்பவத்திற்கு மறுநாள்தான் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. அவ்வாறு ஒருநாள் காலதாமதத்துடன் இந்த வழக்கில் புகாரானது கொடுக்கப்பட்டதற்கு தகுந்த காரணம் என்பது எதுவும் அ.சா.ஆ.1ல் தெரிவிக்கப்படவில்லை என்பதையும், மேலும் அது குறித்து அ.சா.1ம் அவரது சாட்சியத்தில் எதுவும் தெரிவிக்கவில்லை என்பதையும், அறியமுடிகிறது. அது ஒருபுறம் இருக்க, விசாரணை அதிகாரியான அ.சா.5ம் காலதாமதத்திற்கான காரணத்தை அவர் பதிவு செய்த அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடவில்லை என்பதை காணமுடிகிறது. அதோடு சம்பவத்திற்கு மறுநாள்தான் இந்த வழக்கில் புகாரானது கொடுக்கப்பட்டதாக உள்ள நிலையில், வாதியின்

கணவரான அ.சா.2 சம்பவம் நடந்த அன்றே காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதாக முரண்பட்ட சங்கதி ஒன்றை தெரிவிப்பதையும் அறியமுடிகிறது. எதிரி தரப்பில் அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் அ.சா.1ன் உறவினர் திட்டக்குடியில் டி.எஸ்.பி ஆக சம்பவத்தின்போது இருந்தார் என தெரிவிக்கப்பட்டது மறுக்கப்பட்ட நிலையில், அ.சா.1ன் கணவரான அ.சா.2ன் குறுக்கு விசாரணையில் எதிரி தரப்பில் கேட்கப்பட்டபோது அ.சா.1ன் உறவினர் திட்டக்குடியில் டி.எஸ்.பி ஆகதான் இருந்து வந்தார் என ஒப்புக்கொள்ளப்பட்டதையும் காணமுடிகிறது.

13. எதிரி தரப்பில் மேற்படி அ.சா.1ன் உறவினரான திட்டக்குடி டி.எஸ்.பி.யின் அழுத்தத்தின் காரணமாகதான் எதிரியை ஊரை விட்டு துரத்துவதற்காக பொய் புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதற்கு மறுநாளே இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்று வாதிடப்பட்டது. இந்த வழக்கின் இறுதி அறிக்கையை பரிசீலனை செய்து பார்க்கையில், அது வழக்கு பதிவு செய்யப்பட்ட மறுநாளே தயார் செய்யப்பட்டது என்பதை அறியமுடிகிறது. மேற்சொன்னவாறு தனது உறவினர் சம்பவத்தின்போது திட்டக்குடியில் டி.எஸ்.பி.யாக இருந்ததை மறுத்து அ.சா.1 மாற்றி சொல்லி உள்ளார் என்பதையும், அ.சா.1ம் அ.சா.2ம் சம்பவத்தின்போது அவர்கள் வசிக்கும் கள்ளக்குறிச்சி பகுதியில் அல்லாமல் கொட்டையூர் பகுதியில்தான் இருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு வேறு சாட்சிகள் எவரும் சாட்சியமளிக்கவில்லை என்பதையும், சம்பவத்தை மறித்ததாக அ.சா.1ம் அ.சா.2ம் குறிப்பிட்ட அ.சா.3ம் அ.சா.4ம் சம்பவத்தை மறித்ததாக எதுவும் தெரிவிக்கவில்லை என்பதோடு, அவர்களுக்கு இந்த வழக்கை பற்றியே எதுவும் தெரியாது என தெரிவித்துள்ளதையும், மேற்சொன்னவாறு ஒருநாள் காலதாமதத்துடன் புகாரானது காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் முன் வைக்கப்படாததையும், எதிரி தரப்பின் மேற்படி வாதத்தையும் கவனமாக கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது, நில பிரச்சினை தொடர்பாகவும் சிவில் வழக்கு நிலுவையில் இருப்பது தொடர்பாகவும் உள்ள முன்விரோதத்தின் காரணமாக எதிரியை பழிவாங்க வேண்டி நடக்காத சம்பவத்தை நடந்ததாக அ.சா.1 பொய் புகார் கொடுத்து அவரது டி.எஸ்.பி உறவினரை பயன்படுத்தி அழுத்தம் கொடுத்து எதிரி மீது

பொய் வழக்கு பதிவு செய்ய வைத்து தனது கணவரான அ.சா.2ன் மூலம் அந்த பொய் வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க முயன்றுள்ளாரா என்ற சந்தேகத்தை இந்த நீதிமன்றத்திற்கு பெருமளவு ஏற்படுத்துகிறது. அவ்வாறு சந்தேகம் ஏற்பட்டுள்ள நிலையில், அரசு தரப்பு வழக்கையும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டையும் நிரூபணம் செய்வதற்கு அ.சா.1 மற்றும் அ.சா.2ன் சாட்சியத்தை முழுவதும் தழுவும் அளவிற்கு நம்பகத்தன்மை வாய்ந்ததாக இல்லை என்றும், எனவே அவர்களின் சாட்சியத்திற்கு வலு சேர்க்கும் விதமாக இந்த வழக்கில் வேறு சம்பவ சாட்சிகளின் சாட்சியம் அமைந்திருக்க வேண்டும் என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது.

14. ஆனால் இந்த வழக்கில் அவ்வாறு வலுவூட்டம் செய்வதற்கு வேறு சாட்சிகளின் சாட்சியம் எதுவும் இல்லை என்ற நிலையில், அரசு தரப்பானது இந்த வழக்கு சம்பவம் உண்மையில் நடந்தது என்றோ, அந்த சம்பவத்தின்போது எதிரி அ.சா.1 மற்றும் அ.சா.2யை வழிமறித்தார் என்றோ, அ.சா.1யை அசிங்கமாக திட்டி குச்சியால் அடித்தார் என்றோ, அ.சா.2யையும் குச்சியால் அடித்தார் என்றோ, பின்னர் எதிரி இருவருக்கும் கொலை மிரட்டல் விடுத்தார் என்றோ, எந்த ஒரு சிறு சந்தேகத்திற்கும் இடமில்லாமல் போதுமான சாட்சிய சான்றாவணத்தின் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே இந்த வழக்கில் நிலவும் சந்தேகங்களின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி இந்த வழக்கில் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை பொறுத்து குற்றவாளி இல்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>**முடிவு**</u>

முடிவாக, **எதிரி மீது இதச பிரிவுகள் 341, 294(பி), 352, 506(1)ன்** கீழான குற்றச்சாட்டுகளும், அரசு தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களின் மூலம் எவ்வித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்படவில்லை என்பதால், எதிரி மேற்படி பிரிவுகளின் கீழ் **குற்றவாளி இல்லை** என்றும் தீர்மானிக்கப்பட்டு, மேற்படி பிரிவுகளில் இருந்து எதிரி குவிமுச 255(1) பிரிவின் கீழ் **விடுதலை** செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

| | |
|---|---|
| II) இவ்வழக்கில் எதிரி எழுதி கொடுத்த பிணையபத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |
| III) இந்த வழக்கில் சான்றுபொருட்கள் கைப்பற்றப்படவில்லை. ஆகையால் அதைப்பொருத்து உத்தரவு ஏற்படுத்தப்படவில்லை. |
| IV) எதிரி 10 நாட்களுக்குள் குவிமுச பிரிவு 437(A) படி இரண்டு ஜாமின்தாரரர்களை நீதிமன்றத்தில் முன்னிறுத்தி ரூ.5000/-க் பிணை பத்திரம் எழுதி தர உத்தரவிடப்படுகிறது. |

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு பகரப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் நாள் செவ்வாய்கிழமையாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.03.10 18:01:05 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
கள்ளக்குறிச்சி.

**அட்டவணை**

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | – | திருமதி.வனிதா க.பெ.சண்முகவேல் |
| அ.சா.2 | – | திரு.சண்முகவேல், த/பெ.ஆதிநாராயணன் |
| அ.சா.3 | – | திரு.முருகன் த/பெ.ஜம்புலிங்கம் |
| அ.சா.4 | – | திரு.பாலமுருகன் த/பெ.கொளஞ்சி |
| அ.சா.5 | – | திரு.ஏழுமலை த/பெ.குப்புசாமி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ. 1 | – | புகார் |
| அ.சா.ஆ. 2 | – | பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ. 3 | – | முதல் தகவல் அறிக்கை |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ. 4 | – | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | – | மாதிரி வரைபடம் |

**3. <u>சான்றுப்பொருட்கள்</u> –இல்லை**

4. <u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் –</u> இல்லை

5. <u>எதிரி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றுப்பொருட்கள்</u> – இல்லை

**<u>குறிப்பு</u>**

1. எதிரி விசாரணைக்காலத்தில் பிணையில் இருந்தார்.
2. எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவு அறிக்கை காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

HARIHARASUDHAN J

Digitally signed by HARIHARASUDHAN J
Date: 2026.03.10 18:01:13 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கள்ளக்குறிச்சி.**

// உண்மை நகல் //

நீதித்துறை நடுவர் எண்.1,
கள்ளக்குறிச்சி.